දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

இளங்கலைமாணி முதலாம் ஆண்டுப் பரீட்சை (வெளிவாரி புதியபாடத்திட்டம்) (ஓகஸ்ற் 2018)

# ECNE 101 பொருளியலுக்கு அறிமுகம்

**அறிவுறுத்தல்கள்:**
**<u>நான்கு</u>** வினாக்களுக்க மட்டும் விடை தருக
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்
ஒவ்வொரு வினாவிற்கும் தலா 25 புள்ளிகள்
கணிப்பான்கள் அனுமதிக்கப்படுகின்றன

---

1. (i) அமையச் செலவு என்ற எண்ணக்கருவுக்கு வரைவிலக்கணம் தந்து, தீர்மானம் மேற்கொள்கின்ற செய்முறையில், இது எப்பொழுதும் முக்கியத்துவம் வாய்ந்ததா என்பதனை விளக்குக.

   (ii) உற்பத்திச்சாத்திய எல்லை என்பதற்கு வரைவிலக்கணம் தந்து, அருமையினை விளக்குவதற்கு ஒரு உற்பத்தி சாத்திய எல்லையினை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதனை விளக்குக.

   (iii) உற்பத்திச்சாத்திய எல்லையினைப் பயன்படுத்தி, அதிகரிக்கின்ற, குறைவடைகின்ற, மாறாதிருக்கின்ற அமையச் செலவு எண்ணக்கருக்களை விளக்குக.

   (iv) சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் நான்கு பிரதான பண்புகளை அடையானம் செய்க. இப்பொருளாதாரத்தின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் விளக்குக.

   (v) "பொருளாதாரத் தூண்டுதல்கள் பணரீதியானவையாகவோ அல்லது பணரீதி அல்லாதவையாகவோ இருக்க முடியும்". இதனை நீர் ஏற்பீரா? பொருத்தமான உதாரணங்களுடன் உமது விடையினை விளக்குக. (தலா 05 புள்ளிகள்)

2 (i) ஒரு குறிப்பிட்ட பண்டத்தினை பிரதிநிதிப்படுத்துகின்ற அதன் சந்தைக் கேள்வி, சந்தை நிரம்பற் சமன்பாடுகள் பின்வருமாறு:

$$Q^d = 200 - 10P$$
$$Q^s = -100 + 20P$$

   (அ) ஒரு வரைபடத்தில், தொடர்புடைய கேள்வி வளைகோட்டினையும், நிரம்பல் வளைகோட்டினையும் வரைக. (02 புள்ளிகள்)

   (ஆ) தொடர்புடைய சமநிலை விலை மற்றும் தொகையினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (இ) அரசாங்கமானது இப்பண்டத்தின்மீது தலா அலகிற்கு ரூபா 3/= இனை நேரில் வரியாக விதிக்குமாயின், மேற்படி சமநிலை விலை, மற்றும் தொகைமீதான தாக்க விளைவுகளை அடையாளம் செய்க. (02 புள்ளிகள்)

   (ஈ) இவவரி விதிப்பின் விளைவாக, நுகர்வோர் மிகையிலும், உற்பத்தியாளர் மிகையிலும் ஏற்படும் மாற்றங்களைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

   (உ) இவ்வரி விதிப்பிற்குப் பதிலாக அரசாங்கமானது, தலா அலகிற்கு ரூபா 3/= இனை மானியமாக வழங்குமேயாயின், இதனால் இப்பண்டத்தின் சமநிலை விலை, தொகை மற்றும் மொத்த மிகை என்பவற்றின்மீதான தாக்க விளைவுகளை அடையாளம் செய்க. (05 புள்ளிகள்)

(ii) பின்வரும் எண்ணக்கருக்களுக்கு வரைவிலக்கணங்கள் தருக:-

(அ) விலைசார் கேள்வி நெகிழ்ச்சி
(ஆ) வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சி
(இ) குறுக்கு விலைசார் கேள்வி நெகிழ்ச்சி (தலா 02 புள்ளிகள்)

(iii) 'விலை அதிகரிப்படைகின்றபோது, ஒரு சாதாரண பொருளினதும், ஒரு இழிவுப் பொருளினதும், பதிலீட்டு விளைவு, வருமான விளைவு ஆகியவற்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

3. (i) உற்பத்தி தொடர்பான 'குறுங்காலம்' 'நீண்டகாலம்' என்பவற்றினை வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)

(ii) 'ஒரு உள்ளீட்டின் விளைவுக்கும்' 'அளவுத்திட்ட விளைவிற்கும்' இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் எண்ணக்கருக்களுக்கு வரைவிலக்கணங்கள் தருக:

(அ) சராசரி உற்பத்தி (AP)
(ஆ) எல்லை உற்பத்தி (MP)
(இ) சராசரிச் செலவு (AC)
(ஈ) எல்லைச் செலவு (MC) (தலா 02 புள்ளிகள்)

(iv) ஒரே வரைபடத்தில் மொத்தச் செலவு (TC) வளையி, மொத்த நிலையான செலவு (TFC) வளையி, மொத்த மாறும் செலவு (TVC) வளையி ஆகியவற்றினை வரைக. அவை ஒவ்வொன்றினதும் போக்கிற்கு பிரதான காரணங்களை அடையாளம் செய்க. (03 புள்ளிகள்)

(v) பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி, ஒரு குறுங்கால உற்பத்திச் செய்முறையினது மூன்று கட்டங்களையும் அடையாளம் செய்க. (03 புள்ளிகள்)

(vi) ஒரு வரைபடத்தில், சராசரி மாறும் செலவு (AVC) வளையி, சராசரி நிலையான செலவு (AFC) வளையி, சராசரிச் செலவு (AC) வளையி, எல்லைச் செலவு (MC) வளையி ஆகியவற்றினை வரைக. (03 புள்ளிகள்)

(vii) ஒரு எல்லைச் செலவு வளைகோட்டின் அதிதாழ் புள்ளியானது,சராசரிச் செலவு வளைகோட்டின் அதிதாழ் புள்ளிக்கு இடதுபுறமாக ஏன் அமைந்து காணப்படுகின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(viii) பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி, சராசரி மாறும் செலவிற்கும் சராசரி உற்பத்திக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (02 புள்ளிகள்)

4. (i) பணவீக்கம் தொடர்பாக பின்வருவனவற்றி விளக்குக:-

(அ) விலை விளைவகள்
(ஆ) வருமான விளைவுகள்
(இ) செல்வ விளைவுகள் (தலா 02 புள்ளிகள்)

(ii) வேலையின்மையின் வெவ்வேறு வகைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பொருத்தமான வரைபடத்தினைப் பயன்படுத்தி, வர்த்தக சகட ஓட்டத்தின் பிரதான கட்டங்களை அடையாளம் செய்க. (02 புள்ளிகள்).

(iv) மெய் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஏன் வாழ்க்கைத்தரத்தின் ஒரு சிறந்த அளவீடல்ல என்பதற்கு இரு காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(v) பின்வரும் எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாடுகளை அடையாளம் செய்க.

(அ) மொத்த தனிநபர் வருமானமும், செலவிடக்கூடிய வருமானமும்
(ஆ) சந்தை விலையும், அடிப்படை விலையும்
(இ) தேறிய ஏற்றுமதியும், தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானமும்
(ஈ) தனியார் சேமிப்பும், அரசாங்கச் சேமிப்பும் (தலா 02 புள்ளிகள்)

(vi) இலங்கையில் சமீபத்தில், தேசிய வருமானக் கணிப்பீட்டு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

5. (i) பின்வரும் தகல்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு பொருளாதாரத்தினை கவனத்திற் கொள்க. (எல்லாப் பெறுமதிகளும் ரூபாவில்)

| | | | |
|---|---|---|---|
| நுகர்வு | (C) | = | 100+0.8Yd |
| முதலீடுகள் | (I) | = | 150 |
| வரி வீதம் | (t) | = | 5% |
| மாற்றல்கள் | (TR) | = | 100 |
| அரசாங்கச் செலவீடு | (G) | = | 250 |
| தேறிய ஏற்றுமதிகள் | (NX) | = | 140 |

(அ) எல்லை நுகர்வு நாட்டம் (MPC), சராசரி நுகர்வு நாட்டம் (APC), எல்லைச் சேமிப்பு நாட்டம் (MPS), சராசரிச் சேமிப்பு நாட்டம் (APS) என்பவற்றிற்கு வரைவிலக்கணங்கள் தருக.
(ஆ) இப்பொருளாதாரத்தின் தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தினை நிர்ணயிக்குக.
(இ) தொடர்புடைய வருமானப் பெருக்கியின் பெறுமதியினைக் கணிப்பிட்டு, அதற்கு விளக்கம் தருக.
(ஈ) தொடர்புடைய பாதீட்டுப் பற்றாக்குறையினைக் கணிப்பிடுக.
(உ) மேற்படி சமநிலையில் நுகர்வுச் செலவீட்டினைக் கணிப்பிடுக.
(ஊ) நிறைதொழில் மட்ட தேசிய வருமானம் ரூபா 3500 ஆக இருப்பின், அதனை அடைந்து கொள்ள வேண்டப்படுகின்ற முதலீட்டின் அல்லது அரசாங்கச் செலவீட்டின் அளவு யாது?
(எ) இத் தேசிய வருமானச் சமநிலையினை ஒரு வரைபடத்தின் மூலம் காண்பிக்குக. (தலா 03 புள்ளிகள்)

(ii) எத்தகைய நிலைமையின் கீழ், பணநிரம்பலில் ஏற்படும் ஒரு அதிகரிப்பானது, பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

6 .பின்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்தினை** சுருக்கமாக விளக்குக:-

(i) இலங்கையின் பொதுப்படுகடன்
(ii) இலங்கையின் தேறிய காரணி வருமானம்
(iii) இலங்கையில் தேசிய வருமான கணிப்பீடு தொடர்பான பிரச்சினைகள்
(iv) இறைக் கொள்கையும், நாணயக் கொள்கையும்
(v) வேலையின்மையின் தீமைகள்
(vi) பணத்தின் தொழிற்பாடுகள்
(vii) பொருளாதார வளர்ச்சியின் நிர்ணயிப்புக் காரணிகள் (தலா 05 புள்ளிகள்)